126

ஓம்

ஞானசாகரம்

(அறிவுக்கடல்)

இது
'சமரச சன்மார்க்க நிலையம்' என்னும்
பொதுநிலைக்கழகத்தின்
அரிய பெரிய செந்தமிழ்விளக்க வெளியீடு

பதுமம், ௧0] துந்துபி ௵ ஆடி௴ [இதழ், ௬.

பொருளடக்கம்

யோகநித்திரை (இந்நூல் இதில் முற்றுப்பெற்றது)
மனிதவசியம் (Personal Magnetism)

ஆசிரியர்
மறைமலையடிகள் என்னும்
ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்
சமரசசன்மார்க்க நிலைய குரு,
பல்லாவரம்

பல்லாவரம், சமரசசன்மார்க்க நிலையத்தின்கண் உள்ள
டி. எம் அச்சுக்கூடத்திற்
பதிப்பிட்டப்பட்டது.

December, 1922.

ஒருபதுமக் கையொப்பம்] [நான்கு ரூபா

All Rights Reserved.

ஓம்

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்

(மறைமலையடிகள்)

இயற்றிய நூல்களில் இப்போது

விலைக்குக்கிடைப்பவை

வெளிவந்துவிட்டது, டிசம்பர், 1922

யோகநித்திரை

திருத்தமான செந்தமிழில் இதுகாறும் வெளிவராத புதிய மறைபொருள் நுட்பங்களைத் தெளிவாக விளக்குவது இந்நூல். ஒவ்வொருவர் அறிவும் உணர்ச்சியும் **யோகநித்திரை** என்னும் **அறிதுயிலிற்** சென்ற அளவானே பேரொளியோடு துலங்கப்பெற்றுக் கண்ணுக்குஞ் செவிக்கும் புலனாகாத மறைபொருள்களை அறியவும், தீராநோய் கொண்டார்க்கும் மருந்தின்றி நோய்நீக்கும் வழிகளைக் காட்டவும், அறிதுயில் வழியாகவே தம்மையுடையார்க்குள்ள நோயை விரைவில் நீக்கவும், தீயதன்மைகளும் செய்கைகளும் உடையாரை அவற்றினின்று விடுவிக்கவும், பின்வரப்போகும் நன்மை தீமைகளை முன்அறிந்துரைக்கவும், வாழ்க்கைக்குரிய எல்லாப்பொருள்களையும் பெற்று இனிது உயிர்வாழ்தற்குரிய முறைகளைப் பிறழாமல் தெரிவிக்கவும், கல்வியிற் சிறந்து மறதியில்லாமலிருக்கும் வழி வகைகளை உணர்த்தவும், தம்மால் விரும்பப்பட்டவர் தம்மை விரும்புமாறு செய்விக்கவும், எல்லாம்வல்ல கடவுளின் திருவருளை அடைந்து இம்மையிலேயே பேரின்பத்தில் அமிழ்ந்திருக்கவும் பெருதவி புரிகின்றன. ஒவ்வொருவரது அறிவும் அறிதுயிலிற் செலுத்தப்பட்டு இத்தனை அரும்பெரும் பயன்களையும் அடைதற்கும் அடைவித்தற்கும் உரிய முறைகள் இந்நூலின்கண் தெள்ளத்தெளிய எடுத்து விளக்கப்பட்டிருக்கின்றன. மிக மறைவாக வைக்கப்பட்ட இக் கல்விப்பொருள் முன்னே எத்தனை ஆயிரம்பொன் செலவழித்து எவ்வளவு காலம் முயன்றாலும் எளிதிற்கிடைப்பது அரிதாயிருந்தது. ஆனால், இந்நாளில்உள்ளார் செய்த நல்வினையால், இம்மறைபொருள் இப்போது வெளிவரக் கிடைத்தமையால், இந்நூலில் தெளித்தெழுதப்பட்ட இதனை எல்லாருங் கற்றுப்பழகி இன்புறுவாராக.

இது வழுவழுப்பான உயர்ந்த சீமைக்கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றது; பெரிய அளவு, 188 பக்கங்கள்; விலை ரூ2–8 அணா.

மாணிக்கவர்சகர் வரலாறுங் காலமும்

சைவசமய முதலாசிரியராகிய மாணிக்கவாசகப்பெருமான் வரலாறு, தன்னைக்கூறும் புராண நூல்களில் முன்னொடுபின் முரணாகப் பலவாறு பிறழ்ந்து கிடத்தலால், அஃது அடிகள் அருளிச்செய்த **திருவாசகந் திருக்கோவையார்** என்னும் நூல்களினின்றுந் திரட்டப்பட்ட மெய்ச்சான்றுகள் கொண்டே ஆராய்ந்து சிக்கறுத்து இந்நூலின்கண் தெளிவுபடுத்தி எழுதப்பட்டிருக்கின்றது.

ஓம்

யோகநித்திரை

அல்லது

அறிதுயில்

இது
பல்லாவரம்
பொதுநெறிக் கழக ஆசிரியர்
ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் என்னும்
மறைமலையடிகளால்
இயற்றப்பட்டுப்

பல்லாவரம்
சமரசசன்மார்க்க நிலையத்தின்கண் உள்ள
டி. எம். அச்சுக்கூடத்திற்
பதிப்பிடப்பட்டது.

டிசம்பர், 1922] [இதன்விலை இரண்டரைரூபா

All Rights Reserved.

Δ 2 m 211, N13 Q2
22-10-6

முதற் புத்தகப்பதிப்பு, ௲௦௧ படிகள்;
சாலிவாகனசகம், ௲௮௱௫, துந்துபிஆண்டு,
கார்த்திகைத்திங்கள், ௨௦-ஆம்நாள்.

ஓம்

முகவுரை

சாலிவாகனசகம் ௲௮௩௪-ஆம்ஆண்டு சித்திரைத் திங்கள் (எப்பிரல். 1911) வெளிவந்த நமது ஞானசாகர ஆரும்பதுமத்து முதல் இதழில் முதன் முதல் துவக்கஞ் செய்யப்பட்ட யோக நித்திரை என்னும் இவ்வரும்பெருங் கல்விநூல், இடையிடையே பல ஆண்டுகளாக மெல்ல மெல்ல வெளிவந்த அதன் ஏழு எட்டு ஒன்பதாம் பதுமங்களில் தொடர்பாக எழுதப்பட்டு, இப்போது நடைபெறும் ஞானசாகரப் பத்தாம் பதுமத்தின் ௬,௭ ஆம் இதழ்களில் முற்றுப்பெறுவிக்கப் பட்டது. ஆகவே, இந்நூல் முற்றுப்பெறுதற்குப் பதினோராண்டுகள் ஆயினவென்று அறிதல்வேண்டும். இவ்வாறு இது மெல்ல மெல்ல எழுதப்பட்டதனால், சென்ற இருபஃதாண்டுகளாக இக்கலைத் திறத்தைப் பற்றிய பலநூலாராய்ச்சிகளிற் கண்ட முடிபுகளும், பல்லாண்டுகளாக இடையிடையே ஆழநினைந்து பார்த்துத் தெளிந்த நுணுக்கங்களும், இதிற் சொல்லப்பட்ட முறைகளை நேரே செய்துபார்த்து அறிந்த மெய்ப்பயன்களும் இதன்கண் இயன்றமட்டும் நன்கெடுத்துக் காட்டி விளக்க இடப்பெற்றேம்.

மக்கள் வாழ்க்கையைப் பலதுறைகளிலுஞ் சீர்திருத்தஞ் செய்து, அறியாமையால் வரும் எண்ணிறந்த துன்பங்களையும் எளிதாகப் படிப்படியாய் விலக்கி, உயிரைத்தூயதாக்கி, இப்பிறவியில் அடைதற்கு உரிய மெய்யறிவு இன்பங்களையும், வரும் பிறவியில் நுகர்தற்குரிய பேரறிவு இன்பங்களையும் பிழையாமல் எய்துதற்கு இந்நூல் உண்மைவழி காட்டுவதாமென்பதை இதனைக் கருத்தூன்றிக்கற்று, இதிலுள்ள முறைகளை நன்கு பழகி வருவாரெல்லாரும் தாமே இனிது உணர்வர். இந்நூலில் எழுதப்பட்டிருக்கும் பொருள்கள், யாமறிந்தமட்டில், தமிழ்மொழியில் இதற்குமுன் இவ்வளவு ஆழமாகவும் விரிவாகவும் விளக்கமாகவும் எவரானும் திருத்தமாக எழுதப்படவில்லை. ஐரோப்பா அமெரிக்கா என்னும் புறநாடுகளிலுள்ள வெள்ளைக்கார நன் மக்களே இக்கல்வியின் மறைபொருள்களைச் செவ்வையாக ஆராய்ந்து நூல்கள் எழுதி உலகவாழ்க்கையிலும் பயன்படுத்திவந்தவர்களாவர். நம் தமிழ்நாட்டிலுள்ள அருந்தவத்தோர் இக்கல்வியினையும் இதனைப் பயன்படுத்தும்

முறைகளையும் நன்கு உணர்வராயினும், தகுதியுடைய மாணுக்கர் சிலர்க்கன்றி வேறெவர்க்கும் அவைகளைச் சிறிதுந் தெரிவியாமல் மறைவாகவே வைத்துவந்தனர். இனி, இங்குள்ள மந்திரகாரரிற் சிலர் இம்முறைகளைத் தெரிந்து பயன்படுத்தி வருவாராயினும், இவற்றின் உண்மைகளைச் சிறிதாயினும் ஆராய்ந்து கண்டு, அவற்றை உயர்ந்தவழிகளிற் பயன்படுத்தத் தெரிந்தவர் அல்லர்; மேலும், அவர் இவற்றைப் பொல்லாங்கான வழிகளிலும் பயன்படுத்தித் தமக்கும் பிறர்க்குங் கேடுவிளைவிப்பவராகவுங் காணப்படுகின்றனர். அருந்தவத்தோரும், மந்திரகாரருங் கையாண்டுவரும் இவ் **யோகநித்திரை** என்னும் அறிதுயின் முறைகளின் உண்மையினையும் மெய்ப்பயனையும் அறிந்துகொள்ளமாட்டாத மக்கள், அவ்வறியாமையாற் பெரிதும் பிழைபட நடந்து, நிரம்பவுந் துன்புறுகின்றார்கள். இக்கலையின் உண்மையினையும் இதனைப்பயன்படுத்தும் வகையினையும் அறியாதிருக்கும்வரையில், சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய மக்கட்கு ஐயோ! துன்பத்தினின்றும் மீட்சி இல்லை! அதுகண்டு உள்ளங் குழைந்தே, இந்நூலிற் சொல்லிய பொருள்களையும் பயன்படுத்தும் முறைகளையும் பல் காலும் பலபடியாலும் ஆராய்ந்து, நேரேயும் செய்துபார்த்து, இவற்றை எல்லாரும் அறிந்து பயன்பெறும் பொருட்டுத் திறந்தெழுதி ஒருநூலாக வெளியிடலாயினேம். இவற்றின்கண் தெரித்தெழுதப்பட்ட முறைகளெல்லாம் நேரே பலகாற் செய்துபார்த்துத் தீதில்லாப் பயன்றருதல் தெளியப்பட்டனவாகலின், இவற்றை ஊன்றிக் கற்றுப் பழகுவார் தாம் வேண்டிய எல்லாநலங்களையும் பெறுவரென்பது திண்ணம்.

இந்நூலின் முற்பகுதிகள் பல்லாண்டுகட்கு முன்னரே வெளிவந்தனவாகலின், அவற்றின்கண் உள்ள சிற்சில வடசொற்களையுங் களைந்து தமிழ்ச்சொற்பெய்து பதிப்பிடுதற்கு இப்போது நமக்கு இடம் வாய்க்கவில்லை. இந்நூலின் இரண்டாம் பதிப்பில் அவை முற்றக்களைந்து முழுதுந் தூயதமிழாக்கப் படும். இத்துணை யாண்டுகள் கழிந்தும் இந்நூல் முற்றுப் பெறுமாறுசெய்த எல்லாம்வல்ல இறைவனை மனமொழிமெய்களாலும் வழிபடுகின்றேம். மறைமலை.

கின்றன. உமக்குப் பக்கத்தே நிற்கும் இவர்களையுங் காண்கின்றீர்'' என்று கூறினர். அவ்விளைஞரும் அதற்கிணங்கி ''ஆம், ஒரே ஒளியாயிருக்கின்றது. நீங்கள் குறிப்பிட்டவர்களையும் பார்க்கின்றேன்.'' என்றார், அப்படியானால், இவர்களின் வலது கையினுள்ளே என்ன இருக்கின்றது?'' என்று அவ் அன்பர் வினவினர். அதற்கவர் முதலில் ''அவர்கை மூடியிருக்கின்றது, யான் உள்ளேயிருப்பதைப் பார்க்கக்கூடவில்லை.'' என்றுவிடை கூறினர். மறுபடியும்அவர் ''இப்போது நன்றாய்உற்றுப்பாரும், கையினுள்ளேயிருப்பது நன்றாய்த்தெரியும், வெளிச்சம் நன்றாயிருக்கின்றது.'' என்றார். அவ்விளைஞர் ''ஆம், அவர்கையினுள்ளே நீளமாய் ஒன்றிருக்கின்றது; ஓ, அஃது ஒரு சிறு கயிறு.'' என்றார். திரும்பவும் அவர் ''பின்னும் என்ன இருக்கின்றது? நன்றாய் உற்றுப்பாரும்.'' என்று வற்புறுத்துச்சொன்னர். ''அதில் ஏதோ ஒன்று சிறிதாயிருக்கின்றது; ஆனால், அஃது இன்னதென்று தெரியவில்லை.'' என மொழிந்தார். அவர் ''இல்லை. இப்போது அது நன்றாய்த்தெரியும். வெளிச்சம் இன்னும் நன்றாயிருக்கின்றது; நன்றாய்ப்பாரும்.'' என்றார். ''ஆம், இப்போது மிகுந்த ஒளிவீசுகின்றது; ஓ, அஃது ஒரு சாவி'' என்று கடைசியாக உண்மையைச் சொல்லிவிட்டார். அதன்பின்னும் எமது பக்கத்திலிருந்த இரண்டொருவர் வேறு சிலவற்றை மறைத்து வைத்துக்கொள்ள அவைகளையும் அவர் பிசகாமற் சொல்லிவிட்டார்.

அறிதுயின்முறையில் மிகவுந் தேர்ந்த ஒரு துரைமகன்* ஒரு சிறுபெண்ணைக்கொண்டு நெடுந்தொலைவில் நிகழ்ந்ததொரு நிகழ்ச்சியைச் சொல்லுவித்தனர். அதனை அவர் சொல்லுகிறபடியே இங்கு மொழிபெயர்த் தெழுதுகின்றோம்: ''ஏழு ஆண்டுகளுக்குமுன் சுவீடனில் உள்ள காதன்பர்க்கில் யான் இருந்தபோது, புகழ்பெற்ற செல்வர் ஒருவர் இல்லத்தில் அறிதுயிலுண்மையைப்பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தி, அத்துயிலைச் சிலர்க்கு வருவித்துங்காட்டினேன். இங்ஙனஞ் செய்கையில், மந்திரக்கண்ணடி†யில் நோக்குதலைக்குறித்து யான்பேச, அச்செல்வர் அதனையுஞ் செய்துகாட்டும்படி என்னைக் கேட்டார்.

* Carl Sextus. † Magic mirror.

அப்போது, அவரது குடும்பத்திற்கு அறிமுகமானவர்களும் நண்பர்களுமாக அங்கே கூடியிருந்த இருபத்தைந்து முப்பது பெயரில், அம்முறையைச் செய்துபார்த்தற்குத் தக்கவர் ஒருவரும் இல்லையென ஒரு நொடிப்பொழுதிற் கண்டு கொண்டேன். அன்றுமாலை பத்துமணிநேரம் இருக்கும். இதற்குத் தக்கவர் இவ்விவ்வாறு இருக்கவேண்டுமென்று யான் குறித்துக் காட்டியபடி, மிகவும் பொருத்தமாகப், பத்துப் பதினோராண்டுள்ள ஒருமகள் தம்மிடம் அலுவல்பார்க்கும் ஒருவருக்கு இருப்பதாக அக்கூட்டத்தில் இருந்த நாகர் ஒருவர் கூறினர். அச்சிறுமியின் பெயரும் இருப்பிடமும் அவர் சொல்லவே, அவள் அருகாமையிலிருந்தமையால் அவளை அழைத்துவரும்படி விரைவாக ஓர்ஆள் அனுப்பப்பட்டனர். அவள் பெற்றோர்கள் அம்முறையைத் தேர்ந்துபார்த்தற்காக ஏதொருதடையுஞ் சொல்லாமையால், போனவர் அச்சிறுமியை அழைத்து வந்தார். அச்சிறுமியை அறிதுயிலிற்செலுத்தி, அங்கு வைக்கப்பட்ட மந்திரக் கண்ணாடியை உற்றுநோக்கும்படிசெய்தோம்; அப்பெண் வியக்கத்தக்க இயற்கைநுண்உணர்வும் சிறந்த தெளிவுக்காட்சியும் உடையளாயிருந்தாள். ஸ்டாக்கோமில் உள்ள சிற்றரசி ஒருத்தியைக்காணும்படியான் அவளுக்குச்சொன்னேன். அவளும்சிறிதும் மலைப்படையாமல் 'அப்படியே' என்று உடன்பட்டுச்சொல்லி, அச்சிற்றரசியின் வடிவத்தையும் அவள் அன்று மாலையில் அமர்ந்திருக்கும் அறையையும் நிரம்ப நன்றாய் விரித்துரைத்தாள். (சுவீடனுக்குத் தலைநகரான ஸ்டாக்கோம் என்பது இப்போது யாங்களிருக்குங் காதன்பர்க் என்னும் நகருக்கு முந்நூற்றைம்பதுமைல் தொலைவில் உள்ளது; இச்சிறுமி அச்சிற்றரசியை ஒருகாலும் பார்த்தவளும் அல்லள்.) அதன்பிறகு, அச்சிறுமி, அவ்வறையில் அவ்வரசியோடுஉடனிருக்கும் ஓர் இளைஞனையுங்கண்டு அவன்றன் உருவத்தின் தன்மைகளையும் நுட்பமாக விரித்துரைக்கப் புகுந்தாள். அதைக்கேட்டு அக்கூட்டத்தில் இருந்தவர்களெல்லாம் நகையாடினர். சென்ற ஆறுதிங்களாக அவ்வரசியின்பால் மிகுந்த காதலன்பு உடையனாய் அவளைப்பாராட்டிக்கொண்டு ஒழுகும் அவ் வரசிளைஞனைப்பற்றி அச்சிறுமி படம்எழுதிக் காட்டினாற்போற் சொல்லிய விளக்கவுரை

அவ்வளவும் ஒத்திருந்தன. ஆனாலும், அவளது விளக்கவுரை வரவர அளவுக்குமிஞ்சிச் சென்றமையாலும், புல்லிய தன்மை யுடையதா யிருந்தமையாலும் யான் அத்தனையோடு அதனை நிறுத்தவேண்டுவதாயிற்று. அச்சிற்றரசியையும் அவள் காத லனையும்பற்றிய ஒரு குறிப்பு அங்கிருந்தவர் கேட்கத்தக்கதா யில்லை; மேலும், அவ்வில்லத்திற்குரிய செல்வர்க்கும் அது துன் பந்தருவதா யிருந்தது. தானும் தன்நடக்கையும் இப்போது பலருங் காணத்தக்கதில்லையி விருப்பதைச் சிறிதும் உணராது, கதவுகள் தாழிட்டுச் சாத்தப்பட்ட அறைக்குள் தான் பத்திர மாயிருப்பதனால், தான் ஊரார் பழிச்சொல்லுக்குத் தப்பிக் கொண்டதாக அச்சிற்றரசி எண்ணியிருந்தாள். அறிதுயிலைப் பற்றி ஆங்காங்கு விரிவுரை நிகழ்த்தும்பொருட்டு நார்வேமுழு தும் நான்கு திங்கள்வரையிற் சுற்றிவருதற்காக அடுத்த இர விற் கிறித்தியானியா நகரத்திற்குச் சென்றேன். காதன்பர்க் நகரத்திற்கு யான் மறுபடியும் திரும்பிவந்தபொழுது முன்னே எனக்கு விருந்தாற்றிய அச் செல்வரைக்கண்டேன். நடைத் துயிலிற்சென்ற சிறுமி அச் சிற்றரசியைப்பற்றித் தெளிவுக் காட்சியிற்கண்டு கூறியவைகளைக் குறித்துத் தாம் இடையே ஆராய்ந்து பார்க்க அவை யவ்வளவும் உண்மையா யிருக்கத் தெளிந்ததாக எனக்கு எடுத்துரைத்தார். அதனோடு, அன்று மாலையில் அச்சிற்றரசியின் நடக்கையைப்பற்றி எல்லாரும் நகை யாடத்தக்கதாக அவள் முன்னறிந்துசொல்லிய நிகழ்ச்சி ஒன் றும் நிரம்ப உண்மையாயிருந்ததென்றும் அவர் எனக்கறிவித் தார்.” இவ்வாறு அறிதுயிலிற்சென்ற சிற்சிலர் தெளிவுக்காட்சி யுடையராய்த் தொலைவில் நிகழும் நிகழ்ச்சிகளையும் நேரேகாண் பதுபோல் தெள்ளத்தெளியக் கண்டுரைக்கும் வியப்பினை இதிற் சிறிது முயற்சியெடுப்பாரெவருந் தாமேயும் நேரிலுணர்ந்து வியக்கலாம்.

இங்ஙனம் நிலப்பரப்பின்மேல் அண்மையிலுஞ் சேய்மை யிலும் மறைவிலிருப்பனவற்றையும் நடப்பனவற்றையுந் தெளி வுக்காட்சியுடையார் காணவல்லராதல் போலவே, இந்நிலத்தி னுள்ளே மிகவும் ஆழமான இடங்களில் உள்ள பொருள்களையும் அவர்கள் தெளியக்கண்டுரைக்க வல்லவர்களா யிருக்கின்றார்கள்.

இதனையும் உண்மையாநிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியினால் விளக்கிக் காட்டுவாம். இஃது அமெரிக்காவில் மெய்யாகநடந்து, கல்வியிற் பெரும்புகழ்பெற்ற ஈடன்* என்பவரால் ஓர்இதழில்வரையப்பட்டது. அதனை அங்கிருந்தபடியேயெடுத்து இங்குமொழிபெயர்த்தெழுதுகின்றாம்:— "சிக்காகோ நகரமானது, உலகத்தில் நாடோறும் விரைந்து முன்னேற்றம் அடையும் நகரங்களுள் ஒன்றென்பது யாவரும் நன்கறிந்ததேயாம். யோனா என்பவரின் சுரைக்கொடி ஒரே இரவில் முளைத்துப் படர்ந்தது போல, அதுவும் ஓர் இரவில் வளர்கின்றது. அதன் குடிமக்கள் விரைவிற் பெருகிவிட்டமையால், உயிர்வாழ்க்கைக்குஞ் செல்வவாழ்க்கைக்குந் தண்ணீர் இன்றியமையாது வேண்டப்படுவதாயிற்று. இயற்கைப்பொருணூல்† பிசகிப்போயிற்று; நிலநூல்வல்லார்‡ அத்தகைய நிலப்படையின் கீழ்த் தண்ணீர் இருத்தல் கூடாதென்று சொல்லிவிட்டார்கள். மேற்பரப்பிலே தான் தண்ணீர்க்காகப் பார்க்கவேண்டுவதாயிற்று; அழுக்கான தண்ணீரையே பயன்படுத்தக் கொடுத்தற்கு ஒரு கூட்டுச் சேர்ந்தது.

இந்நாளில் அச் சிக்காகோநகரத்தில் ஆபிரகாம் ஜேம்ஸ் என்னும்பெயருடைய ஒருவன் இருந்தான்; அவன் களங்கம் அற்றவன், கிறித்துமதத்திற்குப் புறம்பானவர்குடியிற் பிறந்தவன், கல்வியறிவில்லாதவன், உண்மையில் ஒன்றுமேயறியாத ஓர்ஆள். அந்த ஜேம்ஸ்என்பவன் இயற்கையாகவே தெளிவுக் காட்சி வாய்ந்த ஓர் உண்மையான கருவி யென்றும், அவன் நடைத்துயிலின்கட் செலுத்தப்பட்டபோது அந் நகரத்திற்கு அண்டையிற் கீழே குறிப்பான ஒரு நிலப்பாங்கில் ஏராளமான தண்ணீரும் மண்ணெண்ணெயும் இருக்கின்றனவாக அறிவித்தனனென்றும் காரோலின்ஜார்டன் என்னும் மாதர் ஒருவர் வெளியறிவித்தனர். நீண்டகாலம்வரையில் அவன் கூறியதை எவருமே உன்னித்துப்பார்க்கவில்லை. கடைசியாகச் சிக்காகோ நகரத்திற்கு மெயின்என்னும் ஊரிலிருந்து அலுவல்மேல்வந்த

---

* See the article by Dr. Samuel Eadon, M. A., M. D., LL. D., Ph. D., in "The Phrenological Annual" 1892. † இயற்கைப்பொருணூல்—Science. ‡ Geologists.

உவைட்ஹெட் ஸ்காட் என்னும் இருவர், ஆபிரகாம் ஜேம்ஸ் என்பவன் கூறிய செய்தியைக்கேட்டுத், தோண்டினல் ஏராள மான தண்ணீர்கிடைக்கும் இடமாக அவனுற் சொல்லப்பட்ட நிலத்தண்டை அவனை அழைத்துக் கொண்டு சென்றார்கள். நடைத்துயிலிற் சென்றதும், ஜேம்ஸ் அவ்விடத்தை உடனே சுட்டிக்காட்டினன். தான் அத்தண்ணீரைப் பார்ப்பதோடு, அஃது, அவர்கள் அப்போது நிற்கும் இடத்திற்கு இரண்டா யிரமைல் தொலைவில்உள்ள மலைப்பாறைகளிலிருந்து தோன்றிப் பல நிலஅடுக்குகளினூடும் நிலவறைகளினூடும் ஓடிவருவதை யுந் தான் ஒருபடத்திலெழுதிக் காட்டக்கூடுமென்றும் அவர் கட்குச் சொன்னன். உடனே அந்நிலத்தை விலைகொடுத்து வாங்கும் ஏற்பாடுகள்செய்து, அதனைத் தோண்டுதற்குத் துவங் கினர். இங்ஙனந் துவங்கியது கி-பி 1864-ஆம் ஆண்டு பிப்ர வரித் திங்களிலேயாகும்; நவம்பர்த்திங்கள் வரையில் நாடோ றும் நிலத்தைத் தோண்டிக்கொண்டே போக, எழுநூற்றுப் பதினேரடிஆழத்திற் சென்றதுந் தண்ணீர் வந்து தட்டியது; உடனே இருபத்துநான்குமணி நேரத்திற்கு முந்நூறாயிரம் மரக்கால் தண்ணீர் வெளிக்கிளம்பி ஓடலாயிற்று.

"தமருசி துளைத்துச் சென்ற பொத்தலானது கீழுள்ள நிலப்படைகளின் வகைகளைக் காட்டியது; இப்படைகள் அத்த னையும் முன்னமே தெளிவுக்காட்சியுடைய அவன்கண்டுசொன் னமையால், நேரேகாணும் மற்றவர் கண்களுக்கு அவை அதன் உண்மையை மெய்பெறக்காட்டின. முதல் நூறு அடிவரையில் தமருசி துளைத்துச்சென்றது அடைமண்படையா யிருந்தது; அதற்குக் கீழே முப்பத்தைந்து அடிவரையில் எண்ணெயோடு ஊறிய சுக்கான்கற் படையாயிருந்தது, அந்தச் சுக்கான்கல் எவ்வகையான நிலக்கரியையும்போல் நன்றாய் எரியும்; அதற் குங் கீழே நூறு அடிவரையில் சலவைக்கற்படை; அதற்குங் கீழே நூற்றிருபத்தைந்து அடிவரையிற் செம்புப்பொடியும் இரும்புப் பொடியுங் கலந்து சக்கிமுக்கிக் கல்லும் மணலும் ஒருங்குதிரண்ட படை; அதற்குங் கீழே நூற்றைம்பத்தாறு அடிகாறும் மண்ணெண்ணெய் கலந்து கொழுப்புப்போல் தடிப் பாயும் நுண்ணிய சுண்ணம்புபோல் மெல்லியதாயுமுள்ள வண்

டல் மேலேவரப்பெற்ற கற்பாறைப்படை; அதனைபடுத்து ஐந்
நூற்றுமுப்பது அடிகாறும் ஈயங்கலந்த சுக்கான் கற்படை;
பிறகு அறுநூற்று முப்பத்தொன்பதடி வரையில் கந்தகத்
தோடுகலந்த இரும்பும் சக்கிமுக்கிக்கல்லும் உள்ள சுக்கான்
கற்படை மிகவும் அழுத்தமாயிருந்தமையால் அதனைத் துருவிக்
கொண்டுசெல்லும் வேலை மெதுவாய் நடைபெற்றது. இந்த
நேரத்தில் நிலத்தின் அடியிலுள்ள ஆவிகள் மேலெழும்புதலி
னால் ஒரு கொந்தளிப்பு அடிக்கடி உண்டாயிற்று; தண்ணீர் சடு
தியில் முப்பதுஅடியி லிருந்து அறுபதுஅடி கீழேபோய்த் தம
ரூசியின் சிறுதுண்டுகளையும் பிறவற்றையும் எடுத்துக்கொண்டு
மறுபடியுஞ் சடுதியில் மேலேவந்தது. இன்னுந், துளைக்கும்
வேலை நடந்துகொண்டேபோயிற்று; பின்னர் எழுநூற்றுப் பதி
னோரடி ஆழமுள்ள ஒரு மலைப்பாறையின் வளைவு முழுதுந்
துளைக்கப்பட்டவுடனே, அடியில் நாலரை விரற்கடை அகல
முள்ள ஓர் உருவுதுளையிலிருந்து மிகக்குளிர்ந்த தண்ணீரானது
பளிங்குபோற்றெளிவுடையதாய், வைரம்போற்றூயதாய், ஊன்
கழிவு புற்பூண்டுகளின் கழிவு எதுவும் ஒரு சிறிதுங் கலவாத
தாய்ப், பருகுதற்கும் உடம்பின்நலம் பேணுதற்கும் இதுவரை
யிற் கிடைத்த எந்தத் தண்ணீரினும் மிகச் சிறந்ததாய், இனி
வருங்காலமெல்லாம் ஏழைமக்களுக்கு உற்றதொரு நட்பெனப்
பயன்படுவதாய்ச் சடுதியில் மேற்கிளம்பிற்று.

"இதோ நம்பிக்கையற்றவர்களுக்குப் பென்னம் பெரிய
தோர் உண்மையானசெய்தி! கட்புலனாகாத ஒரு வினைமுதலால்
வெளிக்கொணரப்பெற்று, எத்தகையோரானும் எதிர் மறுக்கக்
கூடாத ஓர் உண்மைநிகழ்ச்சி! இயற்கைப்பொருணூல்* தண்
ணீர் கண்டெடுக்க முடியாதென்று கூறிற்று; ஆனால் மன
நூலோ 'நீ மொழிந்தது பொய், ஏனென்றால், இந்தமண்ணுலக
மானது சுழன்றுசெல்லுங் காலம்வரையுஞ் சிறந்தவெள்ளமாய்ப்
புரண்டோடுஞ் செழும்புனல் உள்ள இடம் இதுவென்று நான்
குறித்துக் காட்டுகின்றேன், எனக்கூறிற்று. கி-பி 1864-ஆம்
ஆண்டுமுதல், சிக்காகோ நகரத்தில் எடுக்கப்பட்ட இந்தத்
துளைக்கிணற்றிலிருந்து நாள் ஒன்றுக்கு ஏழரைஇலக்கம் மரக்

* இயற்கைப்பொருணூல்-Natural Science.

கால் தண்ணீர் விழுக்காடு மேலோடிவருகின்றது. மேலும், இத்தண்ணீரைக் குளங்களினும் மிகப்பெரிய தொட்டிகளினுங் கொண்டுபோய் நிரப்பிக்கட்டிவைத்து; மழைகாலத்தில் சிறிதேறக்குறைய நானூற்றெழுபத்தாறு மணங்கு பனிக்கட்டி செய்து விற்றுச் செட்டுப்பிடிக்கின்றார்கள். இன்னும் இப்பனிக்கட்டியை வேண்டும்போது நான்கு மடங்காக்கியும் விற்கலாம்.'' எவரும் மறுத்தற்கு இயலாது, அமெரிக்கமக்களின் கண்ணெதிரே நிகழ்ந்த இவ்வுண்மை நிகழ்ச்சியினால், மக்களின் முகத்தேயுள்ள புறக்கண்களுக்குப் புலனாகாமல் இந் நிலப்பரப்பின் மேலுங்கீழும் நெடுந்தொலைவில் மறைந்து கிடக்கும் எவ்வகைப் பொருள்களும் அவர் தம் அகக்கண்ணின் எதிரே இனிது விளங்கித் தோன்றுதலும், அத் தோற்றத்தினுதவியால் முயன்று அவற்றைப் புறக்கண்களுங் காணும்படிசெய்து அக்காட்சியின் உண்மையைத்தெளிந்து பயன் பெறுதலும் உண்டென்பது நன்கு துணியப்படுகின்றதன்றோ?

இனி, இத் தெளிவுக்காட்சியின் உதவியாற் காணமற்போன பண்டங்களையுங் கண்டெடுக்கலாம் என்பதற்கு உண்மையாநிகழ்ந்த மற்றொருநிகழ்ச்சியை, இத்துறையில் மிகவல்லரான மற்றோர் ஆசிரியரது நூலிலிருந்து* எடுத்து ஈண்டு மொழிபெயர்த்து வரைகின்றாம்:—"தியடோர் என்னும் ஒரு நீராவிக்கப்பல் பிளாண்டு என்னும் மற்றொரு கப்பல் இலிவர்பூல் என்னுங் கடற்றுறைப் பட்டினத்தைச் சேர்ந்த அன்றைக்கே வந்து சேர்ந்தது. அஃது எங்களுடைய கப்பலைப்பார்க்கினும் பெரியது; என்றாலும் அதன்கண் உள்ள சரக்கும் எங்கள் கப்பலில் உள்ளதைப்போன்றதே. 'எல்லாம் செவ்வையாக இருக்கின்றன' என்று தெரிவிக்கும் பொருட்டாக நான் உடையவர்களிடம் சென்ற அன்றைக்கு, மீகான் மார்ட்டன் என்பவரை மிகவுங் கலவரமான நிலைமையில் எதிர்ப்பட்டேன்; ஏனென்றால், தமது சம்பளமும் தம்மோடு வேலைபார்ப்பவர் சம்பளமுஞ் சேர்ந்ததொகைக்கு ஈடான விலையுள்ள முப்பது பஞ்சுப்பொதிகளை அவர் இழந்துவிட்டார். அவர் அதன் பொருட்டு மிகவுங் கலங்கினமையால், அவர்தம் மனைவியும்

* How To Thought-Read by Dr. James Coates, Ph. D., F. A. S.

ஆற்றுமை மிக்கவளாகித், தெளிவுக்காட்சியில் திறமைவாய்ந்த ஓர்இளம்பெண்ணை யுடையரான ஹட்சன் என்னுங் கப்பற்றலைவனிடஞ் சென்று உசாவும்படி அவரைத் தூண்டினுள். நாங்கள் இருவேமும் தெளிவுக்காட்சியைப்பற்றிய செய்தியில் ஐயுறவுகொண்டவர்களாக இருந்தோம். 'இக்காலத்திய மந்திரமுட்டை' யைப்போன்றவற்றில் தாம் தலையிட்டுக்கொள்ள விருப்பம் இல்லையென்று மார்ட்டன் முதலில் தெரிவித்தார்; ஆனுல், முடிவாகத் தம்மனைவியின் வேண்டுகோளுக்கு இணங்கிப்போக உடன்பட்டார். முதலில் மாலுமி ஹட்சனுக்கு ஒன்றேகால் ரூபா கட்டணஞ் செலுத்தியபின், தெளிவுக்காட்சியுடைய அவ்விளம்பெண்ணைக் கண்டுபேச இடம்பெற்றேம். தெளிவுக்காட்சி யுடைய அறிதுயிலுக்கு அவ் விளம்பெண் செலுத்தப்பட்டபின், மார்ட்டன் அப்பெண்ணின் வலதுகையைத் தமது வலக்கையிற் பிடித்துக்கொண்டு, தாம் கேட்க விரும்பியவைகளைக் கேட்கலாம் என்று கற்பிக்கப்பட்டார். அவள் கூறியவிடைகள் பின்வருமாறு இருந்தன:—தியடோர் என்னுங் கப்பல் முதலிற் புறப்பட்ட துறைமுகத்திற்குத் திரும்ப நினைவினுற்சென்றுள். அக்கப்பலானது இலிவர்ப்பூலை விட்டு அட்லாண்டிக் கடலைக் குறுக்கேகடந்து, மேனிந்திய தீவுகளின்ஊடே மறுபடியும் புது ஆர்லியன்ஸ் என்னும் பட்டினத்திற்குப் போனவழியைத் திரும்பச் சொல்லிக் காட்டியதோடு, தன்கைகளாலுந் தொடர்ந்து சுட்டிக்கொண்டு வந்தாள். கடைசியாக, 'ஆம், பஞ்சுப்பொதி காணுமற்போனது இவ்விடத்திலே தான். சுற்றிலுஞ் சிவப்புக்குறியுள்ள ஒருபெரிய கறுப்புக் கப்பலின் மேற்றட்டிலே அவைகள் வைக்கப்பட்டிருக்கின்றன.' என்று அவள் மொழிந்தாள், அதன்பிறகு, அக் கப்பல் தன் இருப்பிடத்திற்குத் திரும்பி வந்தவழியைத் தன் சொற்களாலேயன்றிக் கையினுலுங் குறிப்பிட்டுக் காட்டுவாளானுள்; ஆனுல், அட்லாண்டிக் கடலைத் திரும்பக் குறுக்கிட்டுவந்தபின், இலிவர்ப்பூலைநோக்கி ஐரிஷ் கால்வாயில் வருவதைவிட்டுப், பிரஞ்சுக் கரையை நோக்கிச் செல்வதுபோல் இங்கிலிஷ் கால்வாயின் பக்கமாய்த் திரும்பினுள்; அதன்பின், தன்கையைநீட்டி 'ஓ, இதோ பஞ்சுப்பொதிகள்; அங்குள்ளவர்கள் ஆ, எவ்வளவு பகடியான

மக்களாயிருக்கின்றார்கள்; அவர்கள் இங்கிலீஷ் பேசவில்லை.' உடனே, மார்ட்டன் மீகாமன் 'நல்லது, அதுதான் தாமஸ் மீகாமனின் பிரன்ஸ்விக்,' என்றார். நியூஆர்லிபன்ஸ் என்னும் பட்டினத்தின் துறைமுகத்தில் தமது கப்பலோடு நின்றுகொண்டிருந்த அவ்வமெரிக்கர் கப்பல் தனக்குரிய பஞ்சுச்சரக்கை ஏற்றிக்கொண்டிருந்தது, அப்போது தியடோர் தானுஞ் சரக்கேற்றிக்கொண்டு பிரஞ்சுத் துறைமுகப்பட்டினமாகிய ஹாவருக்குப் போவதாயிருந்தது. இங்ஙனம் அப் பெண்மகள் தனது தெளிவுக்காட்சியால் அறிந்துசொன்னவற்றைக் கேட்டு மனநிறைவு உடையவராய், மார்ட்டன் மீகாமன் தமது இல்லத்திற்குச்சென்று, உடனே தாமஸ்மீகாமனுக்கு எழுதிக் காணாமற்போன தமது சரக்கைப்பற்றிக் கேட்டார். சிறிது காலங்கழித்துப், பஞ்சுப்பொதி, உண்மையாகவே அங்கே உளவென்றும், அவை துறைமுகத்தினின்றும் பிசகாக எடுக்கப்பட்டனவென்றும், அவை எவர்க்கு உரியனவாய் இருந்தாலும் விற்பனைசெய்தற்கு ஆயத்தமாயிருந்தனவென்றும் அவர்க்கு விடைவந்தது. ஆனல், மார்ட்டன் மீகாமன், அவை திரும்ப அனுப்பப்படுதற்கு ஆம் செலவுதொகை யனுப்பினல், அப்பஞ்சுப்பொதிகள் உடனே அவர்க்கு அனுப்பப்படுமென்பதுந் தெரிவிக்கப்பட்டது. அவர் அங்ஙனமேசெய்ய, பிரஞ்சுநாட்டு ஹாவர் துறைமுகத்திலிருந்து இங்கிலாந்தி லிருக்கும் இலிவர்ப்பூல் துறைமுகத்திற்கு வருதற்குரிய செலவுமட்டும் உடையனவாய் அப்பஞ்சுப்பொதிகள் உரியகாலத்தே அவரிடம் வந்துசேர்ந்தன. இவை தாம் உண்மையாக நிகழ்ந்தவை; ஆனல், அந்நிகழ்ச்சியினியல்பை விளக்குதற்கு யான் புகவில்லை." என்னும் இம்மெய்ச்செய்தியால், பன்னாட்களுக்குமுன் நெடுந்தொலைவிற் றவறிப்போன பொருள்களும் தெளிவுக்காட்சி யுடையாரால் எளிதிற்கண்டறியப்படும் உண்மை நன்கு நிலைபெறுகின்றதன்றே?

இனி, நோயால் வருந்துவோரின் நோயின் இயல்பை அறியமாட்டாமல் தவிக்கும் மருத்துவர் அதனைத் திட்டமாய் அறிந்து கொள்ளுதற்குந் தெளிவுக்காட்சி பெரிதும் உதவிபுரிவதாகும். உடம்பின்உள்ளே அமைந்த கருவிகளிற்றோன்றிய நோய்களைப் புறக்கண்கள்மட்டும் உடைய மருத்துவர் யாங்ஙனம்

உணரவல்லார்? அகத்துள்ளநோயைத் திட்டமாக அறியமாட்டாமையால், அந்த நோய்க்குத்தக்க மருந்தைக்கொடுக்க ஏலாமல், தகாதமருந்தைக் கொடுத்துப் பிழைபடுகின்றார்கள். நோயாளிகளும் பொருட்செலவு செய்தும் மருந்துண்டும் பயன்பெறாமல் நெடுகத்துன்புற்று உயிரையுந் துறக்கின்றனர். ஆங்கில மருத்துவரிற் பலர் நோயாளிகளின் அகத்தே நோயிருக்குமிடந்தெரியாமல் நோயில்லா வேறிடங்களை அறுத்துப்பார்த்து ஏமாற்றம் அடைகின்றனர். அவர்தம் அறியாமையால், அந்நோயாளிகளும் ஆற்றுதற்கரிய துன்பமெய்திச் சாகின்றனர். ஆதலால், மருத்துவப் பயிற்சியோடு, தெளிவுக் காட்சியால் நோயின் தன்மையைக் கண்டறியும் முறைகளிலும் பழகித் தேர்வாராயின் அத்தகைய மருத்துவரால் உலகிற்கு விளையும் நன்மைகள் அளவிடப்படா. நோயின் இயல்பு தெளியப்படாமையால் ஒரு நோயாளியும் அவருக்கு மருத்துவஞ்செய்த ஆங்கில மருத்துவருந் தெளிவுக்காட்சியின் உதவியால் அத்துன்பங்கள் நீங்கப்பெற்றமைக்கு உண்மையாநிகழ்ந்த மற்றொரு வரலாற்றினை மேற்குறிப்பிட்ட அறிதுயிற்புலமை ஆசிரியர்* நூலிலிருந்தெடுத்து மொழிபெயர்த் தெழுதுகின்றாம்:—"இயற்கையாகவே தெளிவுக்காட்சி என்னும் ஒரு பெரும் பேற்றினை அடைந்து தன்மட்டில் உயிர்வாழும் ஒரு பெருமாட்டிக்கு அறிமுகமாகும் நல்வினையை ஆசிரியர் உவில்ட் என்பவர் பெற்றார். தமக்கு நண்பனாயுள்ளவன் ஒருவன் பல ஆண்டுகளாக ஒவ்வோர் இரவும் பல நாழிகைநேரம்வரையில் முதுகிலும் மார்பிலும் கொடியதொரு நோயுற்று வந்தனனென்றும்,நாட்செல்லச் செல்லப் பிறகு அவன் இரவுமுழுதும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருக்க வேண்டியவன் ஆயினனென்றும், அதனால் அவன் கால்கள் வீங்கத்துவங்கினவென்றும் அவ்வாசிரியர் அப்பெருமாட்டிக்குச் சொல்லினர்.

"இந்த நோயாளி சென்ற மூன்றுஆண்டுகளாக இலண்டன்மா நகரத்திலுள்ள பலரால் முறையாக மருத்துவஞ் செய்யப்பட்டுவந்தனர். நெஞ்சப்பையில் இன்னதென்று விளங்காத ஏதோ ஒருபிசகு இருக்கவேண்டுமென்று சிலர் சொன்னார்கள்;

* Dr. James Coates' How To Thought-Read.

வேறுசிலர் அது நரம்புநோய் என்றுகூறினர்; ஒருவர் அதனைப் பொருத்துப்பிடிப்பு என்ருர், கடைசியாக ஒருவர் முதுகெலும்பு மிகவும் அழுகிப்போயிற்று என்ருர்.''

"உவில்ட் என்பவரின் நேயர், முன்னதாகச் செய்து கொண்ட ஏற்பாட்டின்படி அவரைவந்துகண்டு, மேற்சொல்லிய பெருமாட்டியாரையும் பார்த்தார். இந்த அம்மையார் சும்மா அவரை உற்றுநோக்கினர். அதன்பின், அவர் அவ்வறையை விட்டுச் சென்றபின், அந்த அம்மையார் அம் மருத்துவரை நோக்கிப் பின்வருமாறு கூறினர்: 'அஃது எத்தகைய நோய் என்பதை யான் கண்டுகொண்டேன். அவருடம்பு பளிங்கு போற் றெளிவாய் இருந்ததென்ன யான் அதனை அவ்வளவு விளக்கமாய்க் கண்டேன். அவரது நெஞ்சப்பைக்குப்பின்னே கடுக்காய் அளவினதாகிய ஒரு கட்டி புறப்பட்டிருக்கின்றது; அஃது அழுக்குநிறமுடையதா யிருக்கின்றது; அஃது உடைந் துபோகும்போல் ஆடுகின்றது. முற்றிலும் ஒப்வாயிருப்பதைத் தவிர வேறெதுவும் அவர்க்கு நன்மைசெய்யாது.'

"அதன்மேல் உவில்ட் என்பவர் கூறியதாவது: 'அவ்வம் மையார் கருதிச்சொன்னது இதுவென யான் உடனே கண் டேன். ஆகவே, அதனைப் பின்வருமாறு என்நண்பரின் மருத் துவருக்கு எழுத உட்கார்ந்தேன்: என் நண்பருக்குள்ள நோ யின் தன்மை இன்னதென்று கண்டுகொண்டேனென நம்புகின் றேன். இறக்கத்தில்உள்ள செந்நீர்ப்பையில் அவர்க்கு ஒரு வீக்கம் ஒரு கடுக்காயளவு இருக்கின்றது. இதுதான். நெஞ் சப்பையிற் காணப்பட்ட சிறிது இடப்பெயர்ச்சியை உண்டாக் கியதாகும்; இக்கட்டியானது விலாவெலும்புகளின் இடையி லுள்ள நரம்புகளை நெருக்குதலால் முதுகிற் பெருநோயும் மார் பின் முன்புறத்துள்ள தோலின்கண் நோயும் உண்டாகின்றன. நாளைக்கு நீங்கள் பார்க்கச்செல்லும் மருத்துவருக்கு, யாமறிந்த இந்நோயின்நிலையைத் தெரிவித்து, அவர் சொல்வது இன்ன தென்று எனக்கு அறிவியுங்கள்.

"அங்ஙனமே அந்நோயாளி அந்த மருத்துவரிடங் தெரி வித்ததில் அப்பெருமாட்டி அந்நோயைப்பற்றிக் கூறியதுதான் உண்மையென உறுதிப்படுத்தப்பட்டது. அதனோடு அந்நோ

யை நீக்குதற்குச் செய்யவேண்டுவதும் முற்றும் ஓய்ந்திருத்த லேயா மென்பதும் மருத்துவர் எல்லாரானும் ஒப்புக்கொள்ளப் பட்டது. அவ்வாறே அந்நோயாளி ஓய்ந்திருக்க அஃது அவ ரைவிட்டு அகன்றது.'' இவ்வுண்மை வரலாற்றினால், நோயின் இயல்பை உள்ளவாறு உணர்ந்து, அதனை நீக்குதற்குச் செய் யும் முறையுந் திட்டமாகத் தெளிந்துகொள்ளுதற்குத் தெளி வுக்காட்சி எத்துணை யுதவிசெய்கின்றதென்பது நன்கு விளங்கு கின்றதன்றோ?

சில எச்சரிப்புகள்

மேலெடுத்துக் காட்டியவாறு அறிதுயிலைப் பிறர்பால் வரு வித்து, அதனுதவியாற் பல உயர்ந்த நன்மைகளை விளைவிக்க வேண்டுபவர்கள், இதனைப் பயிற்சிசெய்கின்றபோது கட்டாய மாய்க் கருத்திற்பதித்து நடக்கவேண்டிய குறிப்புகள் சிலஉள. அவற்றுள், முதலாவது, ஒருவரை அறிதுயிலிற் செலுத்து கின்றபோது துவக்கத்திலேயே பின்வருமாறுசொல்லி அவ ரைத் தமது கட்டளைக்கு உடன்படுத்திக்கொள்ளக் கடவர்: "இப்போது உம்மை அறிதுயிலுக்குச் செலுத்தப்போகின் றேன். உம்மை அறிதுயிலிற் செலுத்துவது உமக்கும் எனக் கும் உலகத்திற்கும் நன்மையை உண்டாக்குதற் பொருட்டே யாம். ஆதலால், என் கட்டளைப்படி நீர் அறிதுயிலிற்சென்று, அத்துயிலில் இருக்கையில். யான் சொல்லுகிறபடியே செய்து, திரும்ப யான் அதனினின்றும் உம்மை விழிக்கச்சொல்லுகை யில் என் கட்டளைப்படியே உடனேவிழித்து எழுக்கடவீர். என் கட்டளைப்படி யெல்லாம் உள்ளடங்கி நடக்கக்கடவீர்.'' என்று வலியுறுத்திச்சொல்லி, அதன்பிறகு அவர் அறிதுயி விற் செல்கையிலும் இடையிடையே மேற்கூறியவாறு கட்டு றுத்திச் சொல்லுக.

இரண்டாவது: அவர் அறிதுயிலில் இருக்கையில், நன்மை யான சொற்களையே தெளிவாய் வலியுறுத்திச் சொல்லுக. மறந்துந் தீமையானசொற்களைச் சொல்லற்க. "உமது உடம்பு மிகவும் நன்றாய் இருக்கின்றது; உமது அறிவு மிகவும் தெளிவா

யிருக்கின்றது; உமது மூளையும் நுரையீரல் நெஞ்சப்பை தீனிப்பை மலக்குடர் முதலான அகக்கருவிகளும் மிகவுஞ் செவ்வையான நிலையில் இருக்கின்றன. நீர் எப்போதும் நல்ல நினைவும் நல்ல எண்ணமும் உடையவராயிருப்பீர். நீர் என்றும் நல்ல செய்கைகளையே செய்வீர்'' என்று வற்புறுத்திச் சொல்லுக. அவர் அத்தூக்கத்திலிருக்கையில் நோயைப்பற்றிய சொற்கள் ஏதேனுந் தப்பித்தவறிக்கூடவராமல் விழிப்பாய்ப் பேசுக.

மூன்றாவது: அறிதுயிலிற் சென்றவர் அதனினின்றும் எழுந்தபின் இன்னின்ன நாளில் இன்னின்ன நேரத்தில் இன்னின்னவற்றைச் செய்தல்வேண்டுமென்று அவர் அத்துயிலில் இருக்கையில் வலியுறுத்திச் சொன்னால், அவர் அங்ஙனமே தாம் விழித்திருந்தாலுங் குறிப்பிட்டகாலத்திற் குறிப்பிட்ட இடத்திற் குறிப்பிட்டபடியே செய்வர். ஆகையாற், பின்நடக்க வேண்டியவற்றைச் சொல்லி அவருக்குக் கற்பிக்கும்போது, செவ்வையாய் ஆராய்ந்து சொல்லத்தக்கவற்றைத் திருத்தமாகச் சொல்லல்வேண்டும். ஒருவரைத் துயிற்றுகின்ற மற்றொருவர் தம்மைத்தவிர வேறெவரும் அவரைத்துயிற்றுதல் ஆகாது என்னும் எண்ணம் உடையவராயிருந்தால், அவ் எண்ணத்தை அறிதுயிலில் இருப்பவர்க்குத் திட்டமாய்க் கூறுக. ஏனென்றாற், சிலமுறை அறிதுயிலிற் செலுத்தப்பட்ட ஒருவர் பிறகு எவரானும் எளிதிலே அறிதுயிலிற் செலுத்தப்படுதற்கு இசைந்தவர் ஆவர். இந்த உளவைத்தெரிந்த தீயோர் எவரேனும் இவ் வறிதுயின்முறையைத் தெரிந்துகொண்டு அவருக்கு எளிதிலே அறிதுயிலை வருவித்து அவரைத் தம் வழிப்படுத்திக்கொண்டு அவரைப் பலவகையிலும் ஏமாற்றவுங்கூடும். ஆதலால், நல்லோரான துயிற்றுவோர்தம்மால் துயிற்றப்படுவோர் பிறர் எவரானும் இங்ஙனந் துயிற்றப்படுதல் ஆகாது என்று கட்டுரைத்துச் சொல்லிவிட்டாற், பின்பு இம்முறையிற் பழகிய மற்றெவரும் அவரைத் துயிலச்செய்தல் இயலாது. இன்னும் அவர் அறிதுயிலில் இருக்கையில் அவருக்குத் தாம் கட்டுறுத்திச் சொல்லியவைகளை அவர் அத்துயிலினின்றும் எழுந்தபின் நினைத்தலாகாது என்று சொல்லவேண்டினால், அங்ஙனமே

சொல்லுக; அவர் விழித்தபின் அத்தூக்கத்தில் நிகழ்ந்தவை களை ஒரு சிறிதும் உணரார்.

நான்காவது: மூவகைப்பட்ட அறிதுயிலிற் செலுத்தப்பட் டவர்களும் அந்நிலையிலிருக்குங்கால், அவர்களுக்குத் தோன்று மாறு விளைவித்த உருவெளித்தோற்றங்களை மறையுமாறு செய் து, அவரது உணர்வு எப்போதும்போல ஒழுங்கான நிலையில் இருக்கின்றதெனவுங் கற்பித்து, அவரை விழிக்கச்செய்வதற்கு மறந்துவிடலாகாது.

ஐந்தாவது: துயிற்றப்பட்டவர் அறிதுயிலில் இருக்கும் போது அவரிடம் ஏதேனுங் கேட்கவிரும்பினால் 'நீர் இப் போது செவ்வையாக இருக்கின்றீரா? நீர் ஏதாவது இம்முறை யில் எனக்கு அறிவிக்கக்கூடுமா?' என்று கேட்கவேண்டுமே யல்லாமல் 'நீர் செவ்வையா யிருக்கின்றீர் என்று நினைக்கின் றேன், யான் செய்யவேண்டியமுறை இன்னதென்று அறிவி யும்' என்று கட்டளையிட்டுக் கேட்டலாகாது. ஏனெனில், அறி துயிலில் இருக்கையில் துயிற்றுவோர் ஏதுகட்டளை யிடுகின் றாரோ அக்கட்டளைப்படியே துயில்வோர் செய்வர்; கட்டளை யிடாமற் கேட்டால் அவரது உள்ளத்தில் அப்போது இயற்கை யாகத் தோன்றுவனவற்றை உரைப்பர். அவற்றைக்கேட்டு உண்மை யின்னதென்றுணர்ந்து அதற்கேற்பச் செய்வனவற் றைச் செய்யலாம்.

ஆறுவது: மூவகையான அறிதுயிலிற் செலுத்தப்பட்டோ ரையும் அத் துயிலினின்றும் எழுப்பவேண்டுங் காலத்தில் எழுப்பிவிடுதற்குச் சிறிதும் மறந்துபோகலாகாது. ஒருவருக்கு வரும் அறிதுயிலானது இறைவனது திருவருளின்பத்தில் நிகழ்வதாதலால், அவர் அவ்வின்பத் துயிலினின்றுஞ் சடுதியில் விழித்தெழ விருப்பம் இல்லாதவராய் இருப்பர். அதுபற்றி மனந்தடுமாறி உள்ளங் கலங்கல்வேண்டாம். நீவிர் வேண்டும் போது விழித்தெழ அவருக்கு விருப்பம் இல்லையானால் 'எவ் வளவுநேரந் துயிலவிரும்புகின்றீர்?' என்று அவரையே வின வுக. இரண்டுமணிநேரம் மூன்றுமணிநேரந் தூங்கல்வேண்டு மென விரும்புவராயின் அங்ஙனமே அவரைத் தூங்கவிடுக. இன்னும் பல மணிநேரந் தூங்கல்வேண்டும் என்பராயின்,

அதற்கு இசைய இயலாவிட்டால் 'அவ்வளவுநேரங் கூடாது, இன்னுங் குறையச்சொல்லும், இன்னுங் குறையச்சொல்லும்' என்றுசொல்லி அவரை வரவர இணக்கிக்கொண்டுவந்து அரை, அல்லது ஒன்று, அல்லது ஒன்றரை, அல்லது இரண்டுமணி நேரம் வரையில் ஏற்குமாறு தூங்கவிட்டு, அதன்பின் இரண்டு கைகளையும் நீட்டி, உள்ளங்கைகளையும் விரல்களையும் மேல் நோக்கித் திரும்பிக், கடைச் சிறுவிரல்தவிர, ஏனைவிரல்களைச் சேர்த்தபடியாய் அவரது அடியிலிருந்தாயினும் முழங்காலி லிருந்தாயினும் மேல்நோக்கி முடிவரையில் தொட்டேனுந் தொடாமலேனும் பலகால் தடவி, அவர்தம் நெற்றிமேலுங் கண்ணிறைப்பைகளின் மேலும் வாயினால் மென்காற்றுண்டாக ஊதி 'விழித்துக்கொள்க' என்றால் விழித்துக்கொள்வர். அங் ஙனம் விழிக்கையிற் கண்ணிறைப்பைகளைத் திறக்கமாட்டாமற் சிறிது வருந்துவாராயின், அவரை இரண்டொருநிமிஷம் சும்மா இருக்கவிட்டு அதன்பின் 'கண்ணைத் திறந்துபாரும்' என்று கட்டளையிட்டால் அவர் விழித்துக்கொள்வர். அல்லது, யான் இருபது எண்ணியவுடன் விழித்துக்கொள்வீர் என்று சொல் லிக், கைகளை மேனோக்கித் தடவுகையில் 'ஒன்று—இரண்டு—மூன்று' என்று ஆழ்ந்தகுரலிற் சொல்லிக்கொண்டே சென்று இருபதுமுடிந்ததும் 'இப்போது நீர் விழித்துக்கொள்ளக்கட வீர்' என்று கட்டளையிட்டுக் கையைத் தட்டினால் உடனே விழித்துக்கொள்வர்.

என்று இதுகாறும் அறிதுயில் என்னும் யோகநித்திரை யாகிய அருங்கலைத்திறம் இனிது விளக்கப்பட்டது. இவ்வரு மருந்தினுமுயர்ந்த கலையைப்பழகி உலகத்தவர் நலம்பெறுக!

விரும்பப்படுதற்கும் எவ்வளவு சிறந்தனவாயிருக்கின்றன என்பது எவர்க்கும் இனிதுபுலனும்.

மேற்கூறிய இனிய தன்மைகளும் இனிய செயல்களுந் தம்மிடத்தில் இயற்கையாக இல்லாவிட்டாலும், அவற்றைத் தம்மிடத்தில் வருவித்தற்கு ஒருவர் சிலநாட்கள் கருத்தூன்றி முயல்வாராயின், முதலில் வருத்தமாய்த் தோன்றிய அவை பிறகு இயற்கையில் உள்ளனபோல் எளிதாகிவிடும். முதலில் ஓரிளம்பெண் சமயற்றொழிலைக் கற்றுக்கொள்ளும்போது எத்தனைமுறை தன் விரல்களை நெருப்பில்இட்டுத் தீய்த்துக்கொள்கின்றாள், எத்தனைதரங் கஞ்சியைத் தன்காலில் வீழ்த்திக்கொண்டு துடிக்கின்றாள், உணவுப்பண்டங்களை வேக்காட்டில் மிகுத்தோ குறைத்தோ எவ்வளவு கெடுத்துவிடுகின்றாள், உப்புப் புளிப்புக் காரம் முதலியவற்றை அளவறிந்து கூட்டத்தெரியாமல் எவ்வளவு பிழைபடுகின்றாள். ஆனாலும், அதனை விடமாட்டாமல் நாட்சென்று பழகப் பழகப், பிறகு அவள் சமயற்றொழிலில் வல்லவளாய் அதனைத் திருத்தமாய் எளிதிற் செய்து முடித்தலையுங் காண்கின்றோம் அல்லமோ? இவைபோலவே, இனிய தன்மைகளிலும் இனிய செய்கைகளிலும் இடைவிடாது பழகப் பழகப், பின்னர் அவை எக்காலத்தும் மாறுதனவாய்த், தங்குறிப்பின்றியே எளிதாக நிகழும்.

இவ்வாறு உள்ளமுஞ் செயலும் இனியவாய்த் தோன்றுதல்போலவே, உடம்பின் தோற்றமும் இனிட்தாயிருத்தல் இன்றியமையாததாகும். அவரவர் தகுதிக்கு ஏற்றபடி உடுக்கும் உடையை ஆரவாரமின்றி, அழுக்கில்லாமல் தூயதாக உடுத்தல்வேண்டும். விலையுயர்ந்த பட்டாடைகளேயாயினும், அடுத்தடுத்து நீரிற்கழுவித் துப்புரவு செய்யப்படாவிட்டால், பார்ப்பதற்குப் பளப்பளப்பாயிருந்தாலும், அவற்றிற்படிந்த வியர்வைநீரும் கட்புலனாகாத அழுக்கும் தம்மைச்சூழ அருவருப்பான நச்சுக்காற்றைப் பரப்பும். அத்தகைய காற்றுக் கண்ணுக்கும் மூக்குக்கும் புலனாகாதாயினும், நுண்ணுணர்வினர் உள்ளத்திற்குப் புலனாகித் தவறாமல் அருவருப்பினை விளைக்கும். ஆகையால், விலையுயர்ந்தனவாயினும் அல்லாதனவாயினும் தாம் உடுக்கும் உடைகளை நாடோறும் நல்லதண்ணீரிற்றோய்த்துக் கழுவித் தூயவாகஅணிதல் பெரிதும் நினைவுகூரற்பாலதாகும்.

முன்னமே காட்டியபடி உடம்பையும் நன்றாய்க்கழுவி, முடைநாற்றம் வீசாதபடி வைத்துக்கொள்ளல்வேண்டும். உடம்பின் மேற்பரப்பை மட்டுங் கழுவிவிடுதலாலேயே தூய்மை உண்டாய்விடும் என்று நினைப்பது பிசகு. உடம்பின்மேல் வந்துசேரும் அழுக்குகளெல்லாம், உடம்பினுள்ளே பிரியும் மலங்களின் கசிவுகளேயாதலால், அகத்துள்ள மலக்குடரில் அழுக்குச் சேராமைப்பொருட்டு அவ்வப்போது நீரேற்றிகொண்டு

அதனையுங்கழுவித் துப்புரவுசெய்தல் வேண்டும். உடம்பை எத்தனை முறை தேய்த்துக் கழுவினாலும், சிலர்க்கு வாய்நாற்றமும் உடம்பில் முடைநாற்றமுங் கிளம்பி வீசி அருகில் உள்ளவர்க்குப் பொறுக்கமுடியாத துன்பத்தையும் அருவருப்பையும் விளைக்கின்றன. இத்தகைய தீய நாற்றம் அவர்கள்பாற் றோன்றுதற்குக் காரணம், அவர்களது மலக்குடரில் மலக்குப்பை சேர்ந்திருத்தலேயாகும். ஆதலால், உடம்பின் புறத்தைக் கழுவுதல் ஒரு தூயவினையாய்க் கருதப்படுதல்போல, அதன் அகத்தைக் கழுவுதலும் அதனினும் பன்மடங்கு சிறந்ததொரு தூயவினையாகக் கருதிச் செய்யப்படுதல் வேண்டும்.

இனி, முகம் அக்குள் முதலான இடங்களில் வளரும் மயிரை அவ்வப்போது எடாமல் வளரவிடுதலும், கைகால் விரல்களில் நகத்தைக் களையாமல் நீளவிடுதலும் அங்ஙனமே அழுக்குச்சேர்ந்து முடைநாற்றம் வீசுதற்கு இடஞ்செய்வதோடு, பார்ப்பதற்கு அருவருப்பான தோற்றத்தையுங்காட்டும். முகம் முதலிய உறுப்புகளில்வளரும் மயிரை உடனுக்குடன் அகற்றிவந்தால், அவ்விடங்கள் அழுக்குச்சேராமல் பளபளப்பாக ஒளிவீசித் திகழும்; பார்ப்பவர்க்கும் மகிழ்ச்சியைத்தரும். மக்களிற் பலர் மூக்கின்கீழ் மேலுதட்டில் மீசைவைத்துக் கொள்ளுகிறார்கள்; மீசையானது சிலருடைய முகத்திற்கு அழகுபயப்பதேயாயினும், உள்ளிருந்து வெளிவரும் மூச்சிற் கழிக்கப்படும் நச்சுத்துகள்கள் மூக்கின்கீழுள்ள மீசைமயிரிற் றங்கித், திரும்ப வெளியிலிருந்து உள்ளிழுக்கப்படும் மூச்சின்வழியாக நெஞ்சப்பையினுட்சென்று, செந்நீரிற்கலந்து கொடிய பல நோயை வருவிக்கின்றனவென்று இதனை ஆராய்ந்துபார்த்த பிரான்சு நாட்டு மருத்துவர்கள் கூறுதலானும், அவர்கள்கூற்று நமதறிவுக்கும் உண்மையாகவே காணப்படுதலானும் மீசைமயிர்வைத்தலும் நன்றாகாதென்பதே துணிபு. இங்ஙனமே, கைவிரல்களில் வளர்ந்த நகங்கள் களையப்படாமல் வைக்கப்படின், அந்நகங்களில்உள்ளநஞ்சு விரல்களால் தொடப்படும் நீரினும் உணவுப்பண்டங்களினுங் கலந்து நோயை வருவிக்கும். சதைக்குமேல் வளர்ந்த நகங்களில் நஞ்சு உளதென்று அதனை ஆராய்ந்து பார்ப்பவர் உரைக்கின்றனர். கால்விரல்களிலுள்ள நகங்களும் அத்தன்மையவேயாகலானும், அவை நீண்டிருந்தால் கீழேகிடக்கும் கற்களினும் வாயிற்படி முதலியவற்றினும் இடறி முழுதுமேபெயர்ந்து புண்ணையுண்டாக்குமாகலானும் அவையும் உடனுக்குடன் களைந்தெறியப்படல்வேண்டும். எவைஎவை துப்புரவாய் இல்லையோ அவை நஞ்சாயும் அழகற்றனவாயும் இருக்கும்; எவைஎவை துப்புரவாய் இருக்கின்றனவோ அவை அமுதமாயும் அழகாயும் இருக்குமென்று தேர்ந்துகொள்க. தூயவாயும் அமிழ்தமாயும் அழகாயும் இருப்பனவே எல்லார்க்குங் கவர்ச்சியை உண்டு பண்ணுமென்பதூஉம் இதுகொண்டு உணரற்பாலதாம் என்க. அழகில்

லாதவர்களும் தூயவான பழக்க வொழுக்கங்களைக் கடைப்பிடித்துத் தொடர்பாக நடப்பாரானால் அழகுபெற்றுத் தோன்றுவார்கள். இயற்கை யாகவே அழகுடனிருப்பவர்களும் அருவருக்குத்தக்க பழக்கவொழுக்கங் களைக் கைப்பற்றி நடப்பாரானால் தமது அழகுகெட்டு வெறுக்கப்படுவர். எனவே, ஒன்றோடொன்று தொடர்பாகவுள்ள அழகையுந் தூய்மையை யும் பாதுகாப்பார்க்கே அன்பும் அறிவுங் கவர்ச்சியும் மேன்மேற்கிளைத்து இம்மை மறுமைப் பயன்களைப் பயப்பிக்கும் என்றுஉணர்க.

இனி, அழகாயிருப்பது அவாவினைப் பெருக்கிப் பல தீமைகளை விளைவிக்குமாதலால், அது விரும்பற்பாலது அன்று என்று சிலர் கூறு வராலெனின்; அங்ஙனங் கொள்வார்கூற்றுப் பிழைபாடு உடைத்தாம். செல்வமானது பல பெருந்தீமைகளையெல்லாம் விளைவித்தற்குங் கருவி யாதலிற் செல்வமே கூடாதென்பாரும், கல்வியும் அங்ஙனமே செவ்வை யான முறையிற் பயன்படுத்தப்படாவழி அதுவும் பல பெருந்தீமைகளை யும் வருவித்தலிற் கல்வியே கூடாதென்பரும், உடம்போடுகூடி இவ் வுலகிலிருத்தலே எல்லாத்தீமைக்கும் ஏதுவாகலின் உடம்பே ஆகாதென் பாரும் உளரோ! அங்ஙனமே அழகாயிருப்பதும் ஒருசில நேரங்களில் தீதுசெய்தல்பற்றி அதனை வேண்டாமென்று கூறுதலும் பொருந்தாது. அழகு ஆகாதுஎன்று வெளிப்பேச்சுக்குப் பேசுகின்றவர்களும் உள்ளத் தில் அதனை விரும்புகின்றவர்களாகவே காணப்படுகின்றனர். அங்ஙனஞ் சொல்லுவோரை நோக்கி 'நீர் எவ்வளவு அருவருப்பான அழகில்லாத தோற்றமுடையவராய் இருக்கின்றீர்' என்று மற்றொருவர் சொன்னால், அச்சொற்களைக்கேட்ட அவர் உள்ளம் வெதும்புதலையும், அவ்வாறன்றி 'நீர் எவ்வளவு அழகாயிருக்கின்றீர்!' என்று சொன்னால் உடனே அவ ருள்ளம் மகிழ்ச்சியாற் றதும்புதலையும் அவரது முகக்குறிப்பினால் நன்கு உணரலாம். எனவே, தீயவருந் தம்மை 'நல்லவர்' என்று கூறுவார் பால் மனமகிழ்ந்து அன்புபாராட்டுதல் கொண்டு எல்லார்க்கும் நன்மையி லேயே விருப்பமிருத்தல் அறியப்படுதல்போல, அழகில்லாதவரும் தம்மை 'அழகுள்ளவர்' என்று கூறுவார்பால் அன்புபாராட்டும் இயல்பைக்கொண் டு எல்லாருக்கும் அழகில் விருப்பம் உண்டென்பதுந் தெளியப்படும். அழகு அறிவு அன்பு என்பவற்றின் விளக்கம் தெய்வத்தின்கண் இயற் கையாக இருத்தலானும், தெய்வத்தின் அருட்பேறுஉடைய உயர்ந்த நன் மக்களுக்கே அம்மூன்றன் விளக்கம் வருதலானும், மேன்மேல் உயர்ந்த வற்றை இடைவிடாது நாடும் மேலோர்க்கு இம்மூன்றுந் தெய்வத்தினரு ளால் உண்டாகுமென்று உணர்ந்துகொள்க. மக்கள் தீயவற்றையும் அரு வருப்பானவற்றையும் நினைப்பதினுஞ் செய்வதினுந் தமது காலத்தைக் கழிந்து வந்தாலும், அவர்களது இயற்கையானது எப்போதும் உயர்ந்த வற்றை விரும்பியபடியாகவே யிருக்கின்றது. எவ்வளவு தீயவனாயிருப்

பவனும் நல்லோரையும் நல்லவற்றையும் விரும்புகின்றான்; தான் நல்லவனாய் நடக்கவேண்டுமென்றும் ஆவலுறுகின்றான்; ஆனால், அவனது உள்ளத்தில் ஏறியிருக்கும் அறியாமை மயக்கமோ அவனறிவையும் உணர்வையுந் தீயவற்றிலும் இழிந்தவற்றிலும் ஏவுகின்றது; அம்மயக்கம் அவனைவிட்டு நீங்கநீங்க அவன் படிப்படியே நன்னெறியிற்செல்ல இடம்பெறுவானென்பது திண்ணம். ஆகவே, அழகென்பது உயர்ந்தநிலையிற் செல்லும் மக்களுக்கு அவர்களது உயிரின் தன்மைக்கு ஏற்ப அவர்களின் உடம்பிலும் வருவதொரு பெரும்பொலிவாகலின், அஃது எத்திறத்தோரானும் விரும்பற்பாலதேயாமல்லது வெறுக்கற்பாலதன்றெனத் துணிக. அங்ஙனமாயின், தம்மை அழகுபடுத்திக் கொள்வாரை நோக்கிப் பிறர் இகழ்ந்துகூறுவ தென்னையெனின்; விலையுயர்ந்த ஆடையணிகலன்கள் அணிந்தும், பொட்டிட்டு மையிட்டு மண எண்ணெய்கொண்டு கூந்தல் முடித்து முகமினுக்கியும் எந்நேரமுந் தம்மை அழகுபடுத்தி ஆரவாரம்புரியுங் கருத்தும் முயற்சியும் உடையாரைக்கண்டு பிறர் இகழ்வாய் நினைத்தலுங் கூறுதலும் இயற்கையேயாம். அவ்வாறின்றிக், குளித்துமுழுகி, மிகுவிலை இல்லாதனவாயினும் தூயவான ஆடைகளும் இன்றியமையாத சில திருத்தமான அணிகலன்களும் பூண்டு, தத்தஞ் சமயஅடையாளங்களையும் அமைதியாக மேற்கொண்டு, நல்லெண்ணமும் நற்செய்கையும் உடையராய்க், கடவுளின் பேரருளை நினைந்தொழுகுவார்பாற் காணப்படும் அமைந்த ஒளியழகினையும், அதனைப் பழுதுபடுத்தாமல் அவர் ஆரவாரமின்றிக் காக்கும் முறையினையும் இகழ்வாக நினைப்பவரும் உரைப்பவரும் எங்கும்இரார்; இத்தகைய நல்லழகு வாய்ந்தோரையும் இகழ்ந்துரைப்பார் உளராயின் அவர் பொறாமைப்பேய் பிடித்தவராகவாதல், எல்லாரும் அருவருக்கத்தக்க சொற் செயல் நினைவுகள் உடையராகவாதல் இருத்தல்வேண்டும். முழுநிலா வொளியைக்கண்டு குலைக்குங் குக்கலும் உளதன்றே? பாலைப்பருகாது கள்ளைக்குடிப்பாரும் உளரன்றே? பித்தமேறிய சிலர் நாவுக்குக் கன்னலுங் கசப்பதுளதன்றோ? இவ்வியல்பினரான கீழோர் எவற்றையும் இகழ்ந்துரைத்தல் இயல்பேயாகலின், இவருரைகொண்டு அழகினை அருவருப்பார் எவரும் இல்லை. ஆகவே, ஆரவாரமில்லாத அமைதியானமுறையாற் றம்மைத் தூயராக அழகுசெய்து, பிறகு தம் நினைவுஞ் செயலையும் உயர்ந்தநெறிகளிற் செலுத்துதல் மேலோர் கடமையேயாமென்க.

இனி, அகமும் புறமும்ஒத்த இனிமைவாய்ந்தவர்பால் எல்லாருங் கவர்ச்சியுடையராய் இருப்பராயினும், அவ்வினிய இயல்புடையார் தமக்குள்ள அம்மேன்மைத் தன்மையைத் தாமே நன்குணர்ந்து தமது ஆற்றலில் நம்பிக்கையுடையராய் ஒழுகினல்லது அது மிக்க பயன்தராது. தமக்குள்ள இனிய இயல்புகளால் தாம் எல்லார்க்கும் மிக எளியராய்

அவர்கள் வேண்டியபடியெல்லாம் இசைந்து நடத்தல்கண்டு, தீயோர் சிலர் அவரை ஏமாற்றி அவர்க்குள்ள பொருள்களையெல்லாங் கவர்ந்து கொள்ளவும் முயல்வர். ஆதலால், தம்பால்வந்து சேர்வாரிடத்தும், தாஞ் சென்று சேருமிடத்தும், இனிய இயல்புடையார் ஒருவர் தாம் எவ்வள வுக்கு எவ்வெவர்பால் இனிமையாய் எளிமையாய் நடத்தல்வேண்டுமென் பதைப் பகுத்தாராய்ந்து நடத்தல்வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு வர் எல்லாவகையினுந் தம்மிற்குறைந்த மற்றொருவர்பால் அளவுக்கு மிஞ் சிய இனிமையும் எளிமையுங்காட்டி நடப்பராயின், அம்மற்றவர் அவ் வுயர்ந்தோரின் மேம்பாட்டைக் கருதாமல் அவரைத் தமக்கு இசைந்தபடி யெல்லாம் நடப்பித்து அவரால் உலகத்திற்கு உண்டாகும் நன்மைகளைத் தடைசெய்துநிற்பர்; அவரைத் தாம் இழிவாகவும் நினைப்பர். அங்ஙனமே, அவ்வினியவர் தம்மினும் உயர்ந்தார்பால் அளவுகடந்த அன்புவைத்துத் தம்மை அவர்க்கு மிகஎளியராய் வைத்து நடப்பாரானால், அவர் அவரால் தாழ்ந்த அலுவல்கள் பார்க்கும்படியாகவும் ஏவப்படுவர்.

தமிழ்ப்புலவரிற் சிலர் தம்மினுஞ் செல்வத்தால் மிக்காரிடத்தும், தமக்கு உதவிசெய்வாரிடத்தும் வரைகடந்த எளிமைகாட்டி, அவர்களைப் பொய்யுரைகள் பலவற்றாற் பலபடப்புகழ்ந்து நடத்தலால், அச்செல்வரும் பிறரும் அப்புலவர்பாலுள்ள அழியாத கல்விச்செல்வத்தின் ஒப்புயர்வில் லாப் பெருமையையும் உணராராய், அவரைத் தாழ்வாக நினைத்துத், தம் மோடு சூதாட அழைத்தும், தம் காமக்கிழத்தியர்பால் தூதாக ஏவியும், இன்னுந் தாஞ்செய்யுந் தகாத செய்கைகட்கெல்லாம் அவரை உடன்படுத் தியும் தமிழ்க் கல்வியின் உயர்வையும், அது கற்றார் பெருமையையும் பாழாக்குகின்றனர். அதனால், அப்புலவர்கள் தமது கல்வியறிவுகொண்டு உலகத்திற்குச்செய்யும் நலங்களெல்லாந் தலையெடாமல் ஒழிகின்றன. ஆ! தமிழ்ப்புலவர்கள் தமது கல்வியினுயர்வையுந் தமதுயர்வையும் எள் ளளவும் உணர்ந்துபாராமல், நிலையில்லாப் பொருளைப்பெற்று நிலையில் லாத் தமது புலாலுடம்பை ஓம்புதற்பொருட்டாகப், பொருளீவாரைப் பலவாறு பொய்யாகப் புகழ்ந்துபாடித், தமிழின்சிறப்பையும் அது கற்றார் பெருமையையும் பாழாக்குதல் பெரிதும் இரங்கத்தக்கதொன்றாம்! இது கொண்டு, பொருளுதவிசெய்யுஞ் செல்வரிடத்தும் பிறரிடத்தும் அன் பின்றித் தலையெடுப்போடு நடக்கவேண்டுமென்பது நமது கருத்தாக நினையற்க. தமதுபெருமையை இழவாமலே தமிழ்ப்புலவர் தமக்கு உதவி செய்வார்பால் அன்போடும் நன்குமதிப்போடும் நடந்துகொள்ளலாம்; சில நேரங்களில் அவர்க்குள்ள உண்மைப் பெருமைகளை உண்மையாகவே புகழ்ந்துபேசி அவர்க்கு உள்ளக்கிளர்ச்சியினை எழுப்புதலுந் தீதன்று. ஏனென்றால், மக்களுள் எவரும் முற்றுமே நல்லரும்அல்லர், முற்றுமே தீயரும்அல்லர்; எத்துணை நல்லோரிடத்தும் தீயஇயல்புகள் சிலவுங் கா

ணப்படும், எத்துணைத் தீயோரிடத்தும் நல்லஇயல்புகள்சிலவுங் காணப்படும்; ஒருவரிடத்துள்ள தீயதன்மைகளை எடுத்துச்சொன்னால் அவர் அது கேட்டு நெஞ்சம்புண்ணாகி அன்பினை இழப்பர்; அதனாற் பெரும்பகைமை விளைதலுங்கூடும்; ஆனதுபற்றித் தீயவற்றை எடுத்துக்கூறுவது பயன்படாமையோடு தீயவற்றையும் பயக்கும்; மற்றுத் தீயராயிருப்பவர் மாட்டும் அவர்பாலுள்ள நன்மைகளை ஆழ்ந்தாராய்ந்து அவற்றை அவர் முன்னிலையிலும் பிறர் முன்னிலையிலும் எடுத்துக்கூறினால், அதனைக்கேட்ட அவர் மனவெழுச்சி மிகப்பெற்றுத், தம்மை உயர்த்துக்கூறினார்பால் அன்புடையராதலோடு, தாமும் நல்வழியில் நடத்தற்கு மிகவிரும்புவர்; எல்லாரிடத்தும் எவ்வகையிலேனும் நன்மையிருத்தல் திண்ணமாதலால் அந்த நன்மையைமட்டும் ஆராய்ந்தெடுத்துப் புகழ்ந்துபேசுதல் பொருத்தமாதலோடு, புகழ்வார் புகழப்படுவாராகிய இருதிறத்தார்க்கும் அன்பினைத் தோற்றுவித்துப் பல நலங்களையும் பயக்கும். ஆகவே, ஒருவரைப் புகழ்தற்பொருட்டு அவரிடத்தில் இல்லாத நலங்களை இருப்பனவாகக் கட்டிப் பொய்த்துப்பேசுதல் வேண்டாம். இஞ்ஞான்றைத் தமிழ்ப்புலவரிற் பலர் ஒரு செல்வரிடத்தில்லாத நலங்களை இருப்பனவாகவைத்து வாய்கொண்ட மட்டும் மனங்கொண்டமட்டும் தமிழ்ப்பாக்களாற் பாடுதலையே புகழ்ச்சியாகப் பிழைபடக் கருதுகின்றார்கள். தாங்கூறுவது பொய்யென்பது அப்புலவர்தம் மனத்திற்கும் நன்றாய்த்தெரியும்; அவராற் பாடப்பெறுஞ் செல்வரும் அப்பொய்ப் புகழ்ச்சியுரைகேட்டு மகிழ்வாரேனும் அவருள்ளத்திற்கும் அது பொய்யென்று நன்றாய்த்தெரியும்; இன்னும் அவ்விருவரையுஞ் சூழ்ந்திருப்பார்க்கும் அது பொய்யென்று தெரியும்; இங்ஙனம் எல்லாரும் பொய்யென்றறிந்த அப்புகழ்ச்சியுரை பின்னர் எல்லாரானும் எள்ளனஞ் செய்யப்பட்டு அருவருப்பினைத் தருதலால், அது பிறகு நிலைபெறாமலே யழிந்து அப்புலவர்க்கு ஏதோர் உண்மைப்பயனையுந் தராமல் ஒழிகின்றது. இவ்வாறன்றி, அச்செல்வர்பால் உண்மையாகஉள்ள உயர்ந்த தன்மைகள் சிலவற்றைமட்டுந் தெரிந்தெடுத்து, அவற்றை அவர் உருக்கத்தோடு சில சொற்களாலேனும், சுருக்கமுந் திறமுமுடைய சில செய்யுட்களாலேனும் புகழ்ந்து உரைப்பராயின், உண்மைப் புகழுரைகளாகிய அவை கூறுவார்க்குங் கூறப்படுவார்க்குங் கேட்பார்க்கும் உள்ளக்கிளர்ச்சியினையும் நிலைபெற்றமகிழ்ச்சியினையுந் தந்து பெரும்பயன் விளைக்கும். பண்டைக் காலத்திருந்த செந்தமிழ்ப்புலவர்கள் தமக்கு உதவிசெய்த செல்வர்களை அவர்பாலுள்ள உண்மை நலங்களைக்கண்டு புகழ்ந்துபாடியதும், அச்செல்வர்கள் ஒரோவொருகாற் பிழைபட நடந்தவழி அப்பிழைகளை மிக இனிதாயும் மெலிதாயும் எடுத்துக்காட்டி அவர் திருந்துமாறு செய்ததும் புறநானூறு, பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து முதலிய தொகை நூல்களிலுள்ள ஒப்புயர்வில்லாச் செந்தமிழ்த்தேன்பிலிற்றும் பைந்தமிழ்ப் பாடல்

களால் நன்கு விளங்காநிற்கின்றன. மற்று இக்காலத்தவரான தமிழ்ப் புலவர்கள் புகழ்ந்துகட்டும் பாட்டுகளோ பொய்யும் புளுகும் மலிந்தன வாய்க் கையிலெடுத்தற்கும் அருவருப்பினைத் தருகின்றன.

எனவே, இனிய இயல்புகளுங் கல்வியறிவும் வாய்ந்தோர் தாம்பிறர் பால் ஓர் உதவியைவேண்டி அவரைச் சார்ந்தொழுகுங்கால், தம்மை அவ ரினுந் தாழ்த்திக்கொள்ளாமலும், அவர்பாலில்லாத நலங்களை இருப்பன வாகப் பொய்படச்சொல்லிப் புகழாமலும்; தம்மையுந் தம்பாலுள்ள கல் விப் பெருமையினையும் பாதுகாத்துக்கொண்டு, தமக்குதவி செய்யுமவர் பாற் காணப்படும் சில நல்லியல்புகளைமட்டுங் கிளர்ச்சியும் நன்மையும் உண்டாகும் அளவறிந்து அளவாகப் புகழ்ந்துபேசல்வேண்டும். இங்ங னம் முறைதெரிந்து ஒழுகப்பெற்றாற், பிறரை வசியப்படுத்தித் தாம் வேண்டியவற்றைப் பெறுதல் எளிதிற் கைகூடும்.

இனி, இவ்வாறெல்லாம் முறைவழுவாமல்நடந்துந் தமக்கு இணங்கி உதவிசெய்வாரைப் பெறுதல் இயலாமற்போனால் என்செய்வதெனின்; அதுபற்றிச் சிறிதும் மனந்தளர்தல் ஆகாது. இந்நிலவுலகம் எவ்வளவோ பெரிதாயிருக்கின்றது! இதன்கண் உயிர்வாழும் மக்களும் எவ்வளவோ பெருந்தொகையினரா யிருக்கின்றனர். அவருட்சிலர் நமக்கு உதவி செய்யாரானால், அவ்வளவில் எல்லாரும் அங்ஙனமேயிருப்பரென எண்ணி மனந்தளர்தல் பொருத்தமன்று. முதலிற் சிலமுறை பழகிப்பார்த்த சிலர் நமக்கு ஏதோர் உதவியும் செய்திலராயின் பின்னும் பின்னும் அவரை யே அவ்வுதவிக்கு எதிர்பார்த்து ஏமாந்துநிற்றல் பெரிதுங் குற்றமுடைத் து. எக்காலத்தும் எவ்விடத்தும் தம்முள் ஏறக்குறைய ஒத்தஇயல்புடைய இருவருக்கே நேசமும் தமக்குள் உதவிசெய்துகொள்ளும் உள்ளக்கசிவும் உண்டாகின்றன. எவ்வாற்றானும் ஒற்றுமையில்லாத இருவர்க்கு அவை யுண்டாதல் அரிதினும் அரிது. ஞாயிற்றினைக்கண்டால் நெருப்பைக் கக் குந் தீக்கண்ணாடி திங்களைக்கண்டால் அங்ஙனஞ்செய்யுமோ? திங்களைக் கண்டால் நீரைக் கசியவிடும் நிலாமணிக்கல் ஞாயிற்றினெதிரில் அவ் வாறு செய்யமாட்டுமோ? இருப்பூசியை இழுக்குங் காந்தம் மரவூசியை அங்ஙனம் இழுக்குமோ? இவைபோலவே, மக்களியற்கையும் பெரும் பாலும் அமைந்திருக்கின்றதென அறிந்துகொண்மின்கள்! ஒருவரைக் கண்டால் மனம்உவக்கும் ஒருவர் மற்றொருவரைக்கண்டால் வெறுக் கின்றனர். ஒருவருக்கு அஞ்சிப்பணிந்து அடங்கியொழுகும் ஒருவர், பிறரொருவர்க்குச் சிறிதும் அடங்காராய் அவரைக் கண்டவுனே சீறிச் சினக்கின்றனர். இவற்றிற்கெல்லாம் ஏது என்னையென்று ஆராய்ந்தால் ஒன்றும் புலனாவதில்லை. இவ்வாறு ஏதோரியைபுமின்றி ஒருவரைக்கண் டால் உவத்தலும், மற்றொருவரைக்கண்டால் வெறுத்தலும் மக்களுள் இயற்கையாக நிகழப்பெறுதலின், அவ்வவ் வியற்கைப்படி பொருந்தும்

இருவர்க்கே அன்பும் தமக்குள் உதவுந்தன்மையும் உண்டாம். இயற்கையிலேயே பிறர் ஒருவர்பால் அன்பு நிகழப்பெறும் ஒருவர்க்கு அவர் இனியராய் இசைந்து ஒழுகஒழுக, அவர்க்கு அவர்பால் அன்பு மேன்மேல் முறுகிவளரும். இங்ஙனந் தத்தமியல்புக்குப் பொருத்தமான இயல்பினர் இவரென்று செவ்வையாகத் தெரிந்துகொண்டபின்னர், அவர்பால் அன்பும் எளிமையுங் காட்டத்தக்க எல்லையறிந்து பழகுதல்வேண்டும். மக்களறிவு சிற்றறிவேயாதலானும், அச்சிற்றறிவுகொண்டு ஒவ்வொருவரது நிலையான இயற்கையை இன்னதென்று திட்டமாய் அறிதல் இயலாமையானும், மக்களியற்கையும் என்றும் ஒருபடித்தாய் இராமற் காலத்திற்கும் இடத்திற்கும் உலகநிகழ்ச்சிகட்கும் இணங்க இடையிடையே மாறக்காண்டலானும் முதலில் 'இவர் நமக்குப் பொருத்தமானவர்' என்றுணர்ந்து, நெருங்கிப் பழகப்பழக, அவரது தன்மை தமக்கு முற்றும் மாறுவதென்றுகண்டாற், பகைமையுண்டாகாமலும், தாம் அவரைவிட்டு நீங்குவது அவர் உணராமலும் அத்துணை மென்மையாக அவர்பாற்கொண்ட தொடர்பினை ஒழித்துவிடுக. அங்ஙனம் எல்லாமக்களுமே மாறுந்தன்மையுடையராயின், மாறாத தொடர்புடையாரைத் தெரிந்துகொள்ளுதல் யாங்ஙனமெனின்; மக்கள் மாறுந் தன்மையினரென்றது அவருட் பெரும்பாலாரிடங்காணும் இயல்புபற்றியேயாம்; மற்று மாறா இயற்கையினராய் நிலைபெற்ற தொடர்பும் நேசமும் கொள்வாரும் கொள்ளத்தக்காரும் அவருட் சிறுபான்மையோர் எங்கும் உளராகலின் அவரைத்தெரிந்து அவர்பால் நிலைபேறான நட்புவைத்தொழுகல் இயல்வதேயாகும். அற்றேல், அத்தகையாரைத் தெரிந்துகொள்ளுதற்கு வழியாதெனின்; அத்தகையவர் தாங்காணும் பலரிடத்தும் மலர்ந்தமுகனும் இனியசொல்லும் உடைய நல்லராய் ஒழுகுவாரேனும் அவரெல்லாரிடத்தும் நிலைபேறான தொடர்பும் நேசமும் வைப்பாரல்லர்; அவ்வாறாயினுந் தம்மிடத்து மாறாதநேசமும் நட்புங்கொண்டு நிலைதிரியாது நடப்பார் சிலரைத் தாமே முயன்று பெறாமல் ஊழ்வழியே பெற்றக்கால் அவர்மாட்டுத் தாமும் நிலைதிரியாத அன்பும் அருளும்பூண்டு நடப்பர். அவர் அத்தன்மையராதல் எவ்வாறு தெளியப்படுமெனின்; தம்பால் நிரம்பிய அன்பும் நேயமும்வைத்து ஒழுகுவோர் அறிந்தோ அறியாமலோ குற்றமானவைகளைச் செய்து பிழைபட்டு நடந்துவிடத்து, அக்குற்றங்களையும் பிழைகளையும் அவர் தமதுள்ளத்தில் நிலைபெற வையாமலும், அவைகளைப் பாராட்டாமலும் அன்பின்கண் முன்னின்றபடியே ஒரேதன்மையாகப் பின்னும் நிற்பர். இதுவே அவரைத் தெளிதற்குரிய வழியாம். என்னெனிற், குற்றங்களையும் பிழைகளையும் பாராட்டாமல் இருப்பதற்கு மாறாதபேரன்பே ஏதுவாகும். தம் அன்பிற்குரியவர்பாலுள்ள குற்றங் குறைபாடுகள் அவர்பால் உண்மையன்புகொண்டார்க்குச் சிறிதுந்தோன்றா. உண்மையன்பின் நிலை பிழை

அதனோடு, அடிகளதுகாலம் சைவசமய ஆசிரியர் எனை மூவர்க்கும் முற்பட்டதாதலும், அதனுண்மையுணராது அவரதுகாலம் அம்மூவர்க்கும் பிற்பட்டதென்று கூறிய சிலர் கூற்றுகள் நடுநின்று நன்காராய்ந்து காண்பார்க்குப் பொருந்தாவாய் ஒழிதலும் இதன்கண் விரித்து விளக்கப்பட்டிருக்கின்றன. இஃது உயர்ந்த சிமைக்கடிதத்தில் அச்சிடப்படுகின்றது. இதன்விலை ரூ 1–4 அணா. விரைவில் வெளிவரும்: (24—12—1922)

	ரூ	அ	பை
சைவசித்தாந்த ஞானபோதம் (இரண்டாம்பதிப்பு)	3	4	0
கோகிலாம்பாள் கடிதங்கள் (இனியபுதுக்கதை)	2	4	0
மரணத்தின்பின் மனிதர்நிலை	2	4	0
அறிவுரைக்கொத்து	1	8	0
பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை	1	8	0
முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை	1	4	0
(இவையிரண்டுஞ் சங்கத்தமிழ் நூல்கள் இரண்டிக்கு விரிந்த உரைகளாகும்.)			
சாகுந்தலநாடகம்	1	4	0
(இது வடமொழியிலிருந்து இனியதமிழில் மொழி பெயர்க்கப் பட்டது)			
குமுதவல்லி முதற்பாகம்	1	4	0
குமுதவல்லி இரண்டாம்பாகம்	1	4	0
(இவை ஆங்கிலத்திலுள்ள லீலா என்னும் புதுக்கதையின் நேரான இனிய தமிழ்மொழி பெயர்ப்பு)			
மாணிக்கவாசகர் வரலாறுங்காலமும்	1	4	0
(இது விரைவில் வெளிவரும்)			
சோமசுந்தரக்காஞ்சியாக்கம்	0	12	0
பண்டைக்காலத்தமிழர் ஆரியர்	0	12	0
சிந்தனைக்கட்டுரைகள்	0	12	0
(ஆங்கிலத்தில் அடிசன்எழுதிய ஆறுகட்டுரைகளின் இனிய தமிழ்மொழிபெயர்ப்பு)			
பொருந்தும்உணவும் பொருந்தாஉணவும்	0	8	0
கடவுளுக்கு அருளுருவம் உண்டு	0	3	0
பெற்றோர்கடமை	0	3	0
சைவசமயபரிபாலனம்	0	2	0
தமிழ்த்தாய்	0	2	0
ஆலயவழிபாடு	0	2	0
சிறுதேவதைகட்கு உயிர்ப்பலி இடலாமா?	0	2	0
ஞானசாகர ஏழாம்பதுமம்	5	0	0
ஞானசாகர எட்டாம்பதுமம்	5	0	0
ஞானசாகர ஒன்பதாம்பதுமம்	5	0	0
ஞானசாகரப் பத்தாம்பதுமக் கையொப்பம்	4	0	0

ஞானசாகர முதற்பதுமத்தின் 1, 2, 3, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, –ஆம் இதழ்களிற் சிற்சில பிரதிகள் இருக்கின்றன; ஒவ்வோர்

இதழினும் அரும்பொருள்கள் உயர்ந்த நடையில் எழுதப்பட்டுள்ளன; ஒவ்வோரிதழின் விலை 4 அணா.

ஞானசாகரமுதல் ஆறு பதுமங்களுந் திரும்பப் பதிப்பிடப்படா; அவற்றில்வந்த பொருள்கள் தனித்தனிப்புத்தகங்களாக வரும்.

இவை வேண்டுவோர் பிற்குறிப்பிட்ட விலாசத்திற்கு எழுதுக.

THE ORIENTAL MYSTIC MYNA

(An English Publication by Swami Vedachalam,)

Contents

Hypnotism and Mesmerism, Hatha Yoga Pranayama, Dream and Success, Human Magnetism, The Evolution of the Cosmos, The Milk-sea Myth, The Theistic Aspect of Saiva Siddhanta, Communications from the Spirits, The Mental Eye, The Social Aspect of Saiva Siddhanta and others, Price Rs. 3

சமரச சன்மார்க்க நிலையம், பல்லாவரம், சென்னை.

குறிப்பு;—சென்ற இரண்டு மூன்று திங்களாக மழைமிகுதியால் நமது அச்சுக்கூட மைஉருளைகள் கெட்டிருந்தமையாலும், அச்சுக்கூட வேலையாள் ஒரு திங்கள் காய்ச்சலாக இருந்தமையாலும், இவ்விதழ் வெளிவரக் காலந்தாழ்ந்தது.

விளம்பரம்

யந்திரங்களும் வசியங்களும்

எல்லாவகையான பொல்லாங்குகளையும் நீக்கிக்கொள்ளவும், உலகவாழ்க்கையில் வெற்றிபெறவும் வேண்டுவார்க்குத் தேவையானவை.

பெருமை, செல்வம், கல்வி, உயர்வைத் தருவனவற்றிற்கு விலை	7	8	0
செம்மை, உடற்புவலிமைக்கு	7	8	0
ஞானயாகங்களிற் சித்திபெற	10	0	0
எந்தக்காரியத்திலும் வெற்றிபெறுதற்கும், வழக்கில்வெல்லுதற்கும்	10	0	0
குதிரைப்பந்தயம், விளையாட்டு, சீட்டாட்டம் முதலியவற்றில் வெற்றிபெறுதற்கு	7	8	0
வியாபாரத்திலும், அலுவலிலும் ஊதியம்பெறுதற்கு	10	0	0
ஆண்வசியத்திற்த	7	8	0
பெண்வசியத்திற்கு	10	8	0
ஆண்பெண்வசியத்திற்கு	7	8	0
நன்செய் புன்செய் நன்றாய்விளைய	7	0	0
காரீயச்சரங்கம் பயன்தர	100	0	0
மாணிக்கம் அரிப்பது பயன்தா	225	0	0
ஆயுள்காலம் முழுதும் அறிந்துசொல்ல	15	0	0
எல்லாச் சித்திக்கும் ராபிசாலமன் என்பவரின் யந்திரம்	15	0	0
ஷை முதற்றரம்	30	0	0
ஷை இரண்டாந்தரம்	21	0	0

குறிப்பு;—மணியார்டர்வழியாக மேற்குறிப்பிட்டபடி யந்திரங்களின் விலையை முற்றும் முன் அனுப்புவோர்க்கு யந்திரங்கள் அனுப்பப்படும். வி. பி. பி. வழியாக அனுப்புவதில்லை. வேண்டுவோர் பின்விலாசத்திற்கு எழுதுக:—

D. A. RAM DUTH,
ASTROLOGER,
No: 30, J, Cheku Street,
COLOMBO, (CEYLON.)